டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

அக்ரி-டாக்டர்



மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 4.7.2024 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 015 - Madurai | Online Edition

# மழைப்பொழிவு மற்றும் கரியமில வாயு அதிகரிப்பை இணைக்கும் புதிய ஆய்வு

## பல்லுயிர் பெருக்கத்தின் எதிர்கால பாதுகாப்புக்கு உதவும்

புது தில்லி, ஜூலை 3

பசுமைக் குடில் வாயுக்களின் அளவு முன் எப்போதும் இல்லாத வகையிலான உலகளாவிய அதிகரிப்பு, பூமத்திய ரேகை பிராந்தியத்தில் மழைப்பொழிவைக் குறைக்கும் என்றும், அதனுடன் தொடர்புடைய மேற்குத் தொடர்ச்சி மலைகள், வடகிழக்கு இந்தியா மற்றும் அந்தமான் ஆகிய பகுதிகளில் உள்ள பசுமையான காடுகளை இலையுதிர் காடுகளாக மாற்றக்கூடும் என்று ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தன்னாட்சி நிறுவனமான பீர்பால் சாஹ்னி இன்ஸ்டிடியூன் ஆஃப் பாலியோ சயின்சஸ் ஆராய்ச்சியாளர்கள், மேற்கண்ட ஆராய்ச்சியில் இது தெரிய வந்துள்ளது.

இந்த காலகட்டத்தில் தான் இந்தியத் தட்டு தெற்கு அரைக்கோளத்திலிருந்து வடக்கு அரைக்கோளத்திற்கு பூமத்திய ரேகைக்கு அருகில் நீடித்தது. இது இந்திய தட்டை ஒரு சரியான இயற்கை ஆய்வகமாக மாற்றுகிறது,

ஜியோசயின்ஸ் ஃபிரான்டியர்ஸ் இதழில் வெளியிடப்பட்ட இந்த ஆய்வு, அதிகரித்த கார்பன் உமிழ்வின் கீழ் பூமத்திய ரேகை / வெப்பமண்டல மழைக்காடுகள் மற்றும் பல்லுயிர் பெருக்கம் குறித்து முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. இது கரியமில வாயு மற்றும் நீரியல் சுழற்சிக்கு இடையேயான தொடர்பை அறிய உதவுகிறது. எதிர்காலத்தில் பல்லுயிர் பெருக்க முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை பாதுகாக்க உதவுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# அட்மா திட்டத்தின் கீழ்

# வளமான மண்வளம் பெற விவசாயிகள் பயிற்சி



அரியலூர், ஜூலை 3

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் சோழமாதேவி கிராமத்தில் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) ராதாகிருஷ்ணன் தலைமையேற்று பேசுகையில் ரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைப்பது குறித்தும் பேரூட்டச்சத்து, நுண்ணூட்டச்சத்து மற்றும் அதன் அவசியம் குறித்தும் விளக்கினார். உயிர் உரங்களை தொழுஉரத்துடன் கலந்து வைத்து நுண்ணுயிர்களைப் பெருக்கி வயலில் இடுவதன் மூலம் ரசாயன உரபயன்பாட்டினை குறைக்கலாம் எனவும் விளக்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் செல்வகுமார் முன்னிலை வகித்து பேசுகையில் உழவன் செயலி, தக்கைபூண்டின் பயன்பாடு, முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டங்கள் மற்றும் வேளாண்துறையில் செயல்படுத்தப்பட;டு வரும் திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துக்கூறினார். கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் உழவியல் துறை தொழில்நுட்ப வல்லுநர் திருமலைவாசன் கலந்து கொண்டு விவசாயி களிடத்தில் சிறப்புரை ஆற்றி பேசுகையில், கோடை உழவு செய்தல், மண்பரிசோதனை செய்து உரமிடுதல், பசுந்தாள் உரப்பயிர்கள் மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தும் போது 25 சதவீதம் இரசாயன உர பயன்பாட்டை குறைக்கலாம் என்று விரிவாக விளக்கி கூறினார். முன்னதாக அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்று பேசுகையில் அட்மா திட்டங்கள் குறித்து எடுத்துக்கூறினார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் தினேஷ் நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சியில் உதவி தொழில் நுட்ப மேலாளர் உா மற்றும் சோழமாதேவி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜூலை 3

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரத்தில், இ.கோட்டைபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட வடக்கத்தியான்பட்டி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி 3.7.24 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் இரா.இராமசாமி பேசுகையில் மத்திய மாநில திட்டங்கள் பற்றியும், தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற விவசாயிகள் முன்வரவேண்டும். காரிப் பருவத்தில் பயிர் செய்யக் கூடிய பயிர்களுக்கு மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இன கவர்ச்சி பொறி போன்றவைகள் பயன்படுத்துவதோடு இயற்கை உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் பயன்படுத்துவும், உழவன்செயலி பதிவிறக்கம் மற்றும் முக்கியத்துவம் பற்றியும் விரிவாக எடுத்த கூறினார்.

இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் பாண்டியன் பேசுகையில் மண் பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் எடுக்கும் முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது. கலைஞரின் ஒருங்கினைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் மானியங்கள் பற்றியும் காரீப் பருவத்தில் சாகுபடி செய்யும் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மைக் குறித்து விளக்கினார்.

இயற்கை வேளாண் பயிற்றுநர் பொ.வேலுசாமி பேசுகையில் தற்பொது உள்ள சூழ்நிலையில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த இயற்கை வழிமுறைகளில் மூலிகை பூச்சி விரட்டி முக்கிய பங்கு வகிக்கின்றது. ஐந்திலை கரைசல் தாயரிக்கும் முறைகள் பற்றியும் செயல்பாடுகள் பற்றியும் பயிர்களுக்கு 10 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும் என்பதை விவசாயிகளிடம் அறிவுறுத்தினார். அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா பயிர்களுக்கு தேவையான பதினாறு வகை சத்துக்கள் குறித்தும் அட்மா திட்டம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்தியா, பிரித்திவிராஜன் செய்து இருந்தனர். வேளாண்மை உதவி அலுவலர் குமார் நன்றி கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஆடு தின்னாப் பாளை மற்றும் ஆடாதொடை சிறப்பம்சம்

## ஆடாதொடை

இது வெண்மை நிறமான கொத்துப்பூக்களையும், மாவிலை போன்ற இலைகளையும் கொண்ட குத்துச்செடி இனம். கிராமத்தில் ஆடாதொடையை வீட்டைச் சுற்றி வேலியாக அமைத்து வளர்ப்பதைக் காணலாம்,

இம்மூலிகைக்கு பல்வேறு மருத்துவப் பண்புகள் உண்டு. இதன் மருத்துவ பயன்கள் சில பெண்களின் பிரசவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக ஆடாதொடையை காயம் செய்து ஒரு வேளை மட்டும் சாப்பிட்டு வர சுகப்பிரசவமாகும்.

காலை வேளையில் ஒரு ஆடுதொடா இலையில் இரண்டு மிளகு வைத்து மென்று ரசத்தை நன்றாக தொண்டையில் படும்படி விழுங்கி வந்தால் குரல் இனிமை பெறும்.

ஆடாதொடை கண்டால் பாடாத தொண்டையும் பாடும் என்பது பழமொழி.

இதன் இலையை சுருட்டி சுருட்டாக உபயோகித்து வந்தால் ஆஸ்துமா விலகும். ஆடாதொடை இலையில் ரசத்தை சீதபேதி இரத்த பேதி இவைகளுக்கு கொடுக்க குணம் கிடைக்கும்.

இதன் இலையை எடுத்து பிழிந்த சாற்றை மண்சட்டியில் ஊற்றி மெழுகு பதம் வரை காய்ச்சிய அதில் வேலைக்கு இரண்டு மிளகு அளவு என மூன்று வேளையும் உண்டு வர கபப் பிணிகள் விலகும்.

ஆடாதொடை இலையை கசாயம் செய்து தேன் கலந்து உபயோகிக்க கபசுரம், இருமல் ஷயம் தீரும்.

இதன் பூவை வதக்கி இரு கண்களின் மீது இரவில் வைத்து கட்ட கண் சம்பந்தமா வியாதிகள் தீரும்.

ஆடு தின்னாப் பாளை மாற்றடுக்கில் அமைந்த வெள்ளைப் பூச்சுள்ள முட்டை வடிவ இலைகளையுடைய தரையொடு படர்ந்து வளரும் சிறு செடி முதிர்ந்த நிலையில் வெடித்துச் சிதறும் காய்களை உடையது.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கரிசத்தில் வளர்கிறது. பாளை என்றும் அழைப்பதுண்டு. எல்லாப் பாகங் களிலும் மருத்துவப் பயனுடையது. வயிற்றுப் பூச்சிக்கொல்லியாகவும் மாத விலக்கைத் தூண்டும் மருத்தாகவும், பேறு கால வலியை மிகுக்கும், மருந்தாகவும் பயன்படும்.

1. 10 மி.லி இலைச்சாறு காலை மாலை குடித்து வர ஒழுங்கற்ற மாதவிடாய் சீராகும். விட்டு விட்டு வரும் காய்ச்சல் குணமாகும்.

2. இலைச் சூரணம் 2 சிட்டிகை வெந்நீரில் கொள்ளப் பாம்பு விஷம். சிடல் விஷம், மலக்கிருமிகள், கருதீ குட்டம், யானைத் தோல், சொறி தீரும்.

3. வேரை அரைத்துக் காலை, மாலை 5 கிராம் கொடுத்து கடும் பத்தியத்தில் (புதுப் பானையில் உப்பில்லாத பச்சரிசி பொங்கல், 24 மணி நேரம் தூங்க விடக் கூடாது) 3 நாட்களில் எல்லா விஷப் பாம்பு நஞ்சும் தீரும்.

4. விதைச் சூரணம் 5 கிராம் விளக்கெண்ணையில் கொடுக்க நன்கு பேதியாகி வயிற்று வலி சூதக்கத்தடை, மலக்கிருமிகள் நீங்கும் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேலு தெரிவித்தார்.

## மாத்தூர் கிராமத்தில் சமச்சீர் உர பயன்பாடு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடந்தது

மதுரை, ஜுலை 3

மதுரை மாவட்டம், கிழக்கு ஒன்றியம், வேளாண்மை துறையின் கீழ் இயங்கும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 3.7.24 புதன்கிழமை அன்று மாத்தூர் கிராமத்தில் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் சமச்சீர் உர பயன்பாடு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. P.பாலமுருகன், வேளாண்மை உதவி இயக்குனர், மதுரை மேற்கு வரவேற்புரை ஆற்றினார். இப்பயிற்சியில் இ.சுப்பிரமணியன், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண் அறிவியல் நிலையம், மதுரை, எஸ்.பானுமதி, இ.செண்பகம், மா.பாரதி, வேளாண்மை அலுவலர்கள், க.மகாராஜன் வேளாண்மை அலுவலர் ஓய்வு, அ.கோஸ்பின் நிர்மலா, வேளாண்மை அலுவலர், மதுரை கிழக்கு ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு சமச்சீர் உர மேலாண்மை பற்றி தொழில்நுட்ப கருத்துகளை எடுத்துரைத்தனர். இறுதியாக கோ.ராம ருஷ்ணன் வட்டார தொழில்நுட்ப மேலாளர் நன்றியுரை கூறினார்.

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

திருவண்ணாமலை, ஜுலை 3

தென் மேற்கு மழை தொடங்கி இருப்பதால் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகள் விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதை பரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன் படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்துகொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியவற்றை பரிசோதனை செய்து அதன்பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளளப்படுகின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர்இ இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/- வீதம் விதைப் பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


IFFCO
Wholly owned by Cooperatives
இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம்
IFFCO
Wholly owned by Cooperatives
பயிர்களில் ஊட்டச்சத்தின் அளவை அதிகரிக்கிறது
சுற்றுச்சூழலுக்கு உகந்தது
குருணை உரங்களை விட விலை குறைவு
உரச்செலவை குறைக்கிறது
பயிரின் தரம் மற்றும் மகசூலை அதிகரிக்கிறது
விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கிறது
IFFCO
पूर्णतः सहकारी स्वामित्व
Wholly owned by Cooperatives
NANO
DAP
Nano Di Ammonium Phosphate
LIQUID (8:16:0)
CROP NUTRITION REDEFINED
Seed Primer | Growth Enhancer | Yield Booster
Less Cost, More Profits
Suitable for all Crops
NANO FERTILISER
FCO Approved
500 ml
விலை ரூ.600/-

# பருவத்திற்கு ஏற்ப நெல் இரகங்களை சாகுபடி செய்ய விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் அறிவுரை

ஒவ்வொரு பயிரிலும் அதிக மகசூலை பெறுவதற்கு அதற்கேற்ற உகந்த பருவத்தில் பயிர் செய்ய வேண்டும். அதே போல் ஒவ்வொரு பயிர் இரகத்தையும் அதற்கேற்ற பருவச் சூழலில் விவசாயம் செய்தால் மட்டுமே சிறந்த விளைச்சல் கைக்கூடி வரும். நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களைப் பொருத்தவரையில், குறுவை, சம்பா மற்றும் தாளடி என மூன்று முக்கிய பருவங்களில் நெற்பயிர் பயிரிடப்பட்டு வருகிறது.

அதேபோல நெல் இரகங்கள், குறுகிய கால இரகங்கள், மத்திய கால இரகங்கள் மற்றும் நீண்ட கால இரகங்கள் என மூன்று வகையாக பயிரின் வயதை அடிப்படையாகக் கொண்டு வகைப் படுத்தப்பட்டுள்ளன.

**குறுவை பருவம்**

குறுவைப்பருவம் ஜுன், ஜுலை மாதங்களில் தொடங்கி செப்டம்பர், அக்டோபரில் முடிவடைகிறது. குறுவைப் பருவத்தில் குறுகிய கால நெல் இரகங்கள் பயிரிடப்படுகின்றன. குறுகிய கால நெல் இரகங்கள் 110-115 நாட்கள் வயதுடையவை. குறுவையில் குறுகிய கால இரகங்களை பயிரிடும் போது ஜுன் மாத இறுதிக்குள் நாற்று விட்டுவிட வேண்டும். தாமதமாக விதைத்தால் அறுவடையின் போது பருவமழை ஆரம்பித்து விடுவதால் அறுவடை செய்வது சிரமமாகிவிடும்.

**குறுவைப்பருவத்திற்கு ஏற்ற இரகங்கள்**

ADT 36, ADT 37, ADT(R)45, ADT 43, ADT(R)48, ADT(R)47, ADT 53, ADT 57, TKM 9, ASD 16, CO 51, CO 53, CO 54, CO 55, TPS 5, TRY 5

**சம்பா பருவம்**

சம்பா பருவத்தில் 150-160 நாட்கள் வயதுடைய நீண்டகால நெல் இரகங்கள் பயிரிடப்படுகின்றன. முன் சம்பா பருவத்தில் நீண்டகால நெல் இரகங்களை பயிரிடுவதாக இருந்தால், ஆகஸ்ட்

15 முதல் செப்டம்பர் 15-க்குள் நாற்று விட்டுவிடவேண்டும். பின் சம்பா பருவத்தில் மத்திய கால நெல் இரகங்களை (130-135 நாட;கள்) பயிரிட வேண்டுமானால் செப்டம்பர் 15 முதல் அக்டோபர் 30-க்குள் நாற்று விடவேண்டும். நீண்ட கால நெல் இரகங்களை பருவம் தவறி பயிரிடுவதால், பயிர் உயரமாக வளருமே தவிர கதிர் பிடிக்காது. பருவம் தவறி பயிரிடும்போது பயிர் பூக்கும் தருணத்தில் கனமழை பெய்தாலும், கதிர் பதராகிவிடும்.

மேலும் தாமதமாக பயிரிட்டால் வெயிலில் பாதிக்கப்பட்டு கதிர்கள் பதராகிவிடும். பின் சம்பா பருவத்தில் நீண்ட கால இரகங்களை விதைப்பதால், பயிர் மார்ச்-ஏப்ரல் மாதங்களில் அறுவடைக்கு வரும். அப்பருவத்தில் பிற வயல்களில் பயிர் அறுவடை செய்யப்பட்டு இப்பயிர் மட்டும் தனியாக நிற்பதால் அனைத்து பூச்சி மற்றும் நோய்களும் இப்பயிரைத் தாக்கும்.




### சம்பா பருவத்திற்கு ஏற்ற நீண்ட கால இரகங்கள்

CR 1009, ADT 51, ADT 52, CR 1009 SUB 1, பின் சம்பா பருவத்திற்கு ஏற்ற மத்திய கால இரகங்கள் ADT 38, ADT(R)46, ADT 39, ADT 54, BPT 5204, CO(R)50, CO 52, IWP, IR 20, TKM 13, TRY 3, TRY 4, TPS 3, SWARNA SUB 1.

### தாளடி பருவம்

தாளடி பருவத்தில் குறுகிய கால இரகங்களை பயிரிடுவதாக இருந்தால் நவம்பர் மாதத்தில் நாற்றுவிட வேண்டும்.

இதனை, நாகப்பட்டினம், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநர் தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# சீகம்பட்டி கிராமத்தில் கிராம முன்னேற்ற குழு உறுப்பினர்களுக்கான காரீப் பருவ பயிற்சி நடந்தது

திருச்சி, ஜூலை 3

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை கீழ் 2024-25ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந் தெடுக்கப்பட்ட சீகம்பட்டி கிராமத்தில் கிராம முன்னேற்ற குழு கூட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான காரீப் பருவ பயிற்சியானது நடைபெற்றது. மணப்பாறை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மோகனா தலைமை வகித்தார் மற்றும் பஞ்சாயத்து தலைவர் அமுதவள்ளி முன்னிலையில் பயிற்சி நடைபெற்றது.

கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் சிறப்பு கூறுகளை விரிவாக எடுத்துரைத்தனர். பசுந்தாள் விதை இருப்பு அதனின் விதைப்பு முறைகள், உழவன் செயலின் பயன்பாடுகள் மற்றும் தமிழ் மண் வளம் பற்றியும் மணப்பாறை வேளாண் விரிவாக மையத்தில் உள்ள உயிர் உரங்கள் பயன்பாடு அவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் விரிவாக எடுத்துரைத்தனர்.

வேளாண்மைத்துறையில் உள்ள மத்திய மற்றும் மாநில திட்டங்களில் உள்ள மானியங்கள், தரிசு நிலங்களை விளை நிலங்கள் மற்றுதல், பேட்டரி தெளிப்பான் இவரப்பு பயிர் இடுவதின் அவசியம் பற்றியும் ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றியும் மற்றும் மணப்பாறை வேளாண் விரிவாக மையத்தில் உள்ள உயிர் உரங்கள் இருப்பு பற்றியும் விரிவாக வேளாண்மை அலுவலர் கண்ணன் எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் ராஜலெட்சுமி, தக்கை பூண்டு தேவைப்படும் விவசாயிகள் பதிவு செய்ய கேட்டுக் கொண்டார். இறுதியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் பிரியங்கா நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்திய சீலன் செய்திருந்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மாட்டுசாணத்திலிருந்து பெயிண்ட் தயாரிக்கப்படுகிறது? தெரியுமா?

**என்ன மாட்டுசாணத்திலிருந்து பெயிண்ட் தயாரிக்கப்படுகிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?**




அந்த காலத்தில் கிராமப்புற பகுதியில் மண்வீடுகளில், மாட்டுசாணத்தை தரையில் மெழுகி வருவார்கள். இந்த முறை ஒரு கிருமி நாசனியும் கூட. அப்படியே தினமும் அதிகாலையில் சாணக்கரைசல் தெளித்து வாசல் மற்றும் சுற்றுப்புற பகுதியை தூய்மையாக வைக்க பயன்படுத்தினார்கள். அப்படிபட்ட பசுவின் சாணத்திலிருந்து தற்போது காதி வாரியம் KVIC முயற்சி செய்து வெற்றியும் அடைந்து விட்டது. அந்த பெயிண்ட்ற்கு பிரக்கரிதி வேதிக் பெயிண்ட் என பெயரிடப்பட்டு சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ளன.

ஒரு பசு மாடு இருந்தால் 30 எக்கரில் விவசாயம் செய்ய எரு தேவையில்லை என்கிறார் பிரபல இயற்கை விவசாயி விஞ்ஞானியான சுபாஷ் பாலேக்கர்.

அப்படிப்பட்ட மாட்டுசாணம் இன்று விலை பொருளாக மாறிவிட்டது. விவசாயிகளிடம் பெயிண்ட் தயாரிக்க சாண கொள்முதல் நடைபெற்று வருவதால் விவசாயிகளுக்கு கூடுதலாக வருமானம் வர வாய்ப்புள்ளது.

**எப்படி என்ன?**

மத்திய அரசின் ஆம்நிர்பர் பாரத் திட்டத்தை வலுப்படுத்த நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் அடுத்த 6 மாதங்களுக்கு 500 உற்பத்தி இலக்கு (PRODUCTION UNIT) அமைக்க காதி வாரியம் (KVIC) திட்டமிட்டுள்ளது.

பசுவின் சாணத்தினால் தயாரிக்கபஙபட்ட பெயிண்ட் பொருட் களுக்கு இந்திய தர நிலைகளின் பணியகம் சான்று (CERTIFI-CATE) அளித்துள்ளது.

மாட்டு சாணம் வண்ண பூச்சு (COW DUNG PAINT) பாக்டிரியா போன்ற கிருமிகள், பூச்சிகள் மற்றும் கொசுக் களிலிருந்து பாதுகாக்கப்படுகிறது. மாட்டு சாணம் வண்ண பூச்சு என்பது ஒரு ஆக்கப்பூர்வமான சுற்றுச்சூழலை பாதுகாப்பதுடன் ஒரு மலிவான செலவில் பூசக்கூடிய பெயிண்ட்டாக உள்ளது என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.

மாட்டு சாணம் இன்று மதிப்புள்ள மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாறி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கிருஷ்ணகிரி வேளாண்மை இணை இயக்குநர் திட்ட பணிகள் குறித்து ஆய்வு

கிருஷ்ணகிரி, ஜூலை 3

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் வேளாண்மை இணை இயக்குநர் பச்சையப்பன் திட்ட பணிகள் ஆய்வு செய்தார்.

கிருஷ்ணகிரி, வேளாண்மை இணை இயக்குநர் பச்சையப்பன், பங்கேற்று தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தில் துவரை நாற்று நடவு செயல்விளக்கதிடல் பார்வையிட்டு துவரை நாற்று நடவு சாகுபடி பரப்பை அதிகப்படுத்த ஒரு ஏக்கருக்கு 2.5 கிலோ விதை, உயிர் உரங்களான ரைசோபியம் 500 மி.லி., பாஸ்போ பாக்டீரியா, 500மி.லி திரவ பொட்டாஷ் 500 மி.லி., உயிரியல் கட்டுப்பாட்டு காரணியான சூடோமோனாஸ் 1 கிலோ, வழங்கப் படுகிறது என தெரிவித்தார். நிலக்கடலை விதைப்பண்ணை வயல் ஆய்வு செய்தார். பசுமை காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் கத்திரிப்பள்ளி கிராமத்தில் மகாகனி மரச்செடிகள் பார்வையிட்டு விவசாயிகளுக்கு வரப்பு பயிராக மற்றும் தனி பயிராகவும் மரக் கன்றுகள் நட இலவசமாக வழங்கப்படுகிறது என தெரிவித்தார். மேலும் ஒருங் கிணைந்த பண்ணையம் திட்டத்தில் கறவைமாடு வளர்ப்பு, மண்புழு உர படுக்கை, தேனீ பெட்டி வழங்கியதை சிகரலப்பள்ளி கிராமத்தில் ஆய்வு செய்தார். மேலும் வேளாண் உதவி இயக்குநர் சிவநதி, துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன், உதவி வேளாண்மை அலுவலர்கள் சுப்பிரமணி, நரேந்திரன், செல்வம் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பாரதிராஜா ஆகியோர் உடன் இருந்தனர்.

# பசுந்தாள் உரமான சணப்பில் வாடல் நோய் மேலாண்மை!

## அறிகுறிகள்

இந்நோய் பயிரின் எல்லாப் பருவங்களிலும் காணப்படும். இளஞ்செடிகள் பாதிக்கப்பட்டால் விதையிலைகள் மஞ்சளாகவும், பழுப்பாகவும் மாறுவதுடன் இலைக் காம்புகளின் மீது பழுப்பு நிற வளையம் காணப்படும். தாக்கப்பட்ட இளஞ்செடிகள் நாளடையில் காய்ந்து விடுகின்றன. வளர்ந்த செடியில் நோய் காணபட்டால் செடியின் அடிபாகத்தில் உள்ள முதிர்ந்த இலைகள் ஆரம்பத்தில் மஞ்சளாக மாறுகின்றன. பின்பு அவையாவும் வாடித் தொங்கி விடும். முதலில் முதிர்ந்த இலைகளும், அதன்பின் இளம் இலைகளும் வாடிவிடுகின்றன. நாளடைவில்




இலைகள்யாவும் உதிர்ந்து விடுகின்றன. வாடிய செடிகளைப் பிடுங்கிப் பார்த்தால் வேர்கள் வளர்ச்சிக் குன்றி காணப்படும். பட்டையை உரித்துப் பார்த்தால் உட்புறத்தில் பழுப்பு நிறத்தில் கீறல்கள் தென்படும். வெண்மை நிற பூஞ்சாண வளர்ச்சி நோய் முற்றிய நிலையில் தண்டின் அடிப்பாகத்தில் தென்படும்.

செடிக்கு எடுத்துச் செல்லப்படும் சத்துக்கள் மற்றும் தண்ணீர் ஆகியவை வேர்ப் பாகத்திலிருந்து மேல்நோக்கி எடுத்துச் செல்வது தடைப்படுகிறது. இதனால் வாடல் ஏற்படுவதற்கு சாதகமாகிறது.

## நோய் பரவும் முறை

இந்நோய் விதைகளின் மூலம் பரவும் தன்மையுடையது. பூஞ்சாணம் மண்ணில் தங்கியிருந்து வேர்களில் பூச்சிகள் அல்லது நூற்புழுக்கள் உண்டாக்கும் காயங்களின் மூலமாகவும் பரவுகிறது.

## மேலாண்மை

ஒரு கிலோ சணப்பு விதைக்கு டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் (அ) சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் 10 கிராம் (அ) கார்பன்டாசிம் 2 கிராம் (அ) திரம் 2 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். எக்டருக்கு 2.5 கிலோ சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் (அ) டிரைக்கொடெர்மா விரிடியை 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் (அ) மணலில் கலந்து விதைத்த 30 நாட்கள் கழித்து இட வேண்டும். பாதிக்கப்பட்ட இடத்தில் கார்ப ன்டாசிம் 1 கிராம் / லிட்டர் தண்ணீரில் கலந்து ஊற்ற வேண்டும் என சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ஹனீஷா தெரிவித்தார்.



# இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைப்பது குறித்த பயிற்சி

அரியலூர், ஜூலை 3

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் பயிர்கள் சாகுடியில் ஒருங்கிணைந்த உரச்சத்து மேலாண்மை மூலம் இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைப்பது குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் அய்யப்பநாயக்கன் பேட்டை கிராமத்தில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் (த.க) ராதாகிருஷ்ணன் பயிற்சிக்கு தலைமை வகித்து தொழில் நுட்ப உரையாற்றினார். பயிர் வளர்ச்சிக்குத் தேவையான நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ் போன்ற பேரூட்ட சத்துக்கள் குறித்தும் கால்சியம், மெக்னீசியம், கந்தகம், போரான் போன்ற நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார். பயிர் சாகுபடிக்கு முன் சணப்பை, கொளிஞ்சி, அகத்தி போன்ற பசுந்தாள் உரப் பயிர்களை சாகுபடி செய்து மண்ணில் மடக்கி உழுவதால் தழைச்சத்தினை அளிக்கும் யூரியா போன்ற இரசாயன உர பயன்பாட்டினைக் குறைக்கலாம் எனவும் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, ரைசோபியம், போன்ற திட, திரவ உயிர் உரங்களை வயலில் இடுவதன் மூலமும் அவற்றை தொழு உரத்துடன் கலந்து வைத்து நுண்ணுயிர்களைப் பெருகச்செய்து வயலில் இடுவதன் மூலமும் இரசாயன உர பயன்பாட்டினைக் குறைக்கலாம் எனவும் விவசாயிகளுக்கு விளக்கினார். நுண்சத்து இடுவதன் முக்கியத்துவம் குறித்து விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுப்ரமணியன் முன்னிலை வகித்தார். அவர் பேசுகையில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட செயல்பாடுகள், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் உட்கூறுகள், திரவ உயிர் உரங்களின் பயன்கள், நுண்ணூட்டக்

கலவை இடுவதன் முக்கியத்தும், அரசுத் திட்டங்களின் மானிய விபரங்கள், மண் ஆய்வு பரிந்துரைப்படி உரமிட்டு இரசாயன உர பயன்பாட்டினைக் குறைப்பது, உழவன் செயலி பதிவிறக்கம் செய்து இடுபொருட்கள் முன்பதிவு செய்வது ஆகியவை குறித்து விளக்கினார். கிரீடு வேளாண் அறிவில் மைய தொழில் நுட்ப வல்லுநர் ராஜா ஜோஸ்லின் இயற்கை உரங்களான பஞ்ச காவ்யா, மண்புழு உரம் ஆகியவற்றை தயார் செய்து பயன் படுத்தும் முறைகள் குறித்தும், இரசாயன பூச்சிக் கொல்லிகளை தவிர்த்து சுற்றுப்புற சூழல் காக்கும் இயற்கை பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளான வரப்பு பயிர் சாகுபடி, ஊடுபயிர் சாகுபடி, மஞ்சள் மற்றும் நீல வண்ண ஒட்டும் அட்டை பயன்படுத்தி சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல், விளக்குப் பொறி மற்றும் இனக்கவர்ச்சிப் பொறிகள் கொண்டு தாய் அந்துப் பூச்சிகளைக் கவர்ந்தழித்தல், நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாக்கும் இயற்கை பூச்சி விரட்டிகளைத் தெளித்து பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல், வேப்பெண்ணெய் மற்றும் வேம்புசார் பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்தி பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறைகள், நோய்களைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கினார்.




சூடோமோனாஸ், டிரைக்கோ டெர்மா விரிடி போன்ற எதிர் உயிரி பூஞ்சாணங்களைக் கொண்டு விதை நேர்த்தி செய்து விதைப்பதன் மூலம் பயிர்களை நோயிலிருந்து பாதுகாக்கலாம் எனவும் விளக்கினார். டிரைக்கோடெர்மா விரிடியை பயன்படுத்தி உளுந்து விதை நேர்த்தி செய்யும் முறை செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் கவிதா, வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார், ஆரோக்கியராஜ், உழவர் நண்பர் மோகன் ஆகியோர் செய்திருந்தனர். இப்பயிற்சியில் அய்யப்பநாயக்கன் பேட்டை கிராம விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# மண்ணிலுள்ள கரிமச் சத்துக்களை அதிகரிக்கும் தொழில்நுட்பங்கள்

புதுக்கோட்டை, ஜுலை 3

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ந.உமா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், பொதுவாக வளமான மண் என்பது பயிரின் வளர்ச்சிக்கு உகந்த நிலையான இயற்பியல் பண்புகள் கொண்டதாய், நிறைய சத்துக்களின் இருப்பிடமாய், பயிர் தேவைக்கு ஏற்ற நீர் பிடிப்பு, காற்று பரிமாறும் திறன், பயிரின் வளர்ச்சிக்கு சத்துக்களை வழங்கும் இயல்பு போன்றவற்றை கொண்டிருக்க வேண்டும். ஆனால் தற்பொழுது பயிருக்கு தேவையான சத்துக்களை மண்ணில் இடாதபோது, இராசயன உரங்களை அதழகமாக இடுவதாலும் மண் வளம் குறைந்து கொண்டு வருகிறது.




இதனை சரி செய்ய மண்ணில் கரிமச் சத்துக்களை அதிகரிக்கும் சாண எரு, மக்கிய பண்ணை குப்பை, தாவரக் கழிவுகள், பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள், புண்ணாக்கு, மக்கிய நகரக் கழிவுகள், வேளாண் பொருட்களை பதப்படுத்தும் ஆலைகளின் மூலம் வெளியேறும் கழிவுகளின் மட்கு போன்றவற்றை மண்ணில் இடுவதால் வளமான மண்ணாகவும், பயிரின் வளர்ச்சிக்கு உகந்த நிலையான இயற்பியல் பண்புகள் கொண்டதாகவும், நீர் பிடிப்பு, காற்று பரிமாறும் திறன் கொண்டதாகவும் மண் மாற்றப்படுகிறது. மேலும் மட்கிய உரத்துடன் நுண்ணுயிரிகளான அசோஸ் பைரில்லம், அசிட்டோபேக்டர், பாஸ்போபேக்டிரியம் மற்றும் சூடோமோனஸ் ஆகியவற்றை கலப்பதால் அவை மேலும் ஊட்டமேற்றப்பட்டு 20 நாட்களில் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையும் அதிகமாகின்றது. இத்தகைய நுண்ணுயிர் உரங்கள் திருமயம் வேளாண்மை கிடங்கில் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றது.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மாஞ்சன்விடுதி கிராமத்தில் காரிப் பருவ கால வேளாண் முன்னேற்ற குழு விவசாயிகளுக்கு பயிற்சி



புதுக்கோட்டை, ஜுலை 3

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அட்மா திட்டத்தின் மூலம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் 2024-2025 கீழ் தேர்வு செய்யப்பட்ட மாஞ்சன்விடுதி கிராமத்தில் கிராம முன்னேற்ற குழுவிற்கான பயிற்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ் தலைமை வகித்தார். திருவரங்குள வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் க.வெற்றிவேல் முன்னிலை வகித்தார். பயிற்சியில் மாஞ்சன்விடுதி கிராம அளவிலான வேளாண் முன்னேற்ற குழு உறுப்பினர்கள் ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ் கலந்து கொண்டு சிறப்பித்தார். அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் நோக்கம் மற்றும் அதன் செயல்பாடுகள் திட்டத்தில் வழங்கப்படும் இடு பொருட்கள் தரிசு நில தொகுப்பு மூலம் சொட்டுநீர் பாசன வசதி அமைத்தல் மண்வளம் மேம்பாடு குறித்த விளக்கங்கள் விவசாயி களுக்கு எடுத்து கூறினார். மேலும் தோட்டக்கலை துறை உதவி தோட்டக்கலை அலுவலர் வெற்றியப்பன் கலந்து கொண்டு தோட்டக் கலை துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களான மாநில தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் வேளாண் வளர்ச்சி திட்டம் நுண்ணுயிர் பாசன திட்டத்தின் கீழ் பழ கன்றுகள், வீரிய ஒட்டு காய்கறிகள், குழி தட்டு நாற்றுகள் மானிய விலையில் வழங்கப் படும் என்று கூறினார். தேவைப்படும் விவசாயிகள் திருவரங்குள வட்டார தோட்டக்கலை துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும் இப்பயிற்சியில் வட்டார தொழில் நுட்ப வேளாளர் இரா.மகேந்திரன், வேளாண்மை துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பன்னை கருவிகள், கை தெளிப்பான் மற்றும் தார்பாலின் மானியங்கள் வழங்கப்படும் என்று கூறினார். மேலும் கோடை உழவு செய்தல் மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி செய்தல் மற்றும் உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு கூறினார். பயிற்சியின் இறுதியில் இரா.மகேந்திரன், வட்டார தொழில் நுட்ப மேலாளர் நன்றி கூறினார். பயிற்சி ஏற்பாடுகளை வி.முருகன் மற்றும் லோ.கவியரசி ஏற்பாடு செய்திருந்தனர்.

# நுண்ணூட்டச் சத்துக்கள் செறிவூட்டல் [Bio fortification]

● ஆரோக்கிய நலன்களுக்காகப் பயிர்களில் ஊட்டச்சத்து செறிவூட்டல் என்பது மிகவும் முக்கியமானது.

● வேளாண் பயிர்களில் ஊட்டச்சத்து செறிவூட்டல் என்பது பயிர்களின் ஊட்டச்சத்து பயன்பாடு, உறிஞ்சும் திறன் மற்றும் மண் வகைகளைப் பொறுத்து வேறுபடுகின்றன.

● நெல்லில் கோ 50, கோ 57, கோ 47, ஏடிடி 36, ஏடிடி 37, திருச்சி 1, ஏடிடி 46 போன்ற இரகங்களும், பச்சைப்பயறில் கோ 6, கோ 7 மற்றும் வம்பன் 2 போன்ற இரகங்களும், உளுந்தில் கோ 5, வம்பன் 8, ஏடிடி 3, டிஎம்வி 1 போன்ற இரகங்களும் அதிகளவு துத்தநாகம் மற்றும் இரும்புச் சத்துக்களை உட் கொள்ளும் திறன் கொண்டவையாகக் கண்டறியப்பட்டுள்ளன.

● எனவே இந்த இரகங்களை வேளாண் ஊட்டச்சத்து செறிவூட்டலுக்குப் பயன்படுத்தலாம்.




● நெல்லில் கோ 51, கோ 47, ஆடுதுறை 47 மற்றும் ஆடுதுறை 37 இரகங்களைக் கொண்டு துத்தநாக செறிவூட் டலுக்காக அடியுரமாக 50 கிலோ துத்தநாக சல்பேட்டுடன், பூக்கும், பால் பிடிக்கும் மற்றும் பால் முற்றி தானியம் ஆகும் பருவங்களில் 0.50 சத துத்தநாக சல்பேட் கரைசலைத் தெளிக்கும் போது விளைச்சல் 18.8 சதவிகிதம் அதிகரிப்பதோடு தானியங்களில் துத்தநாக சத்தின் அளவும் அதிகரிக்கின்றது என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கிரிஜா கூறியுள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# கீழ் அன்பில் கிராமத்தில் கிராம முன்னேற்ற குழு பயிற்சி



திருச்சி, ஜூலை 3

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டாரம் கீழ் அன்பில் கிராமத்தில் கிராம முன்னேற்ற குழு பயிற்சி நடைபெற்றது. இதில் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் பசுந்தாள் விதைப்பு, குறுவை நெல் சாகுபடி பற்றி லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுகுமார் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்ட கிராமமான கீழ் அன்பில் முன்னேற்ற குழு பயிற்சியில் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம், மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், மானிய திட்டங்கள் ,தமிழ் மண்வளம் செயலி பயன்படுத்துதல், மண் மாதிரி சேகரிப்பு அவசியம் மற்றும் மண் மாதிரி அடிப்படையில் உர நிர்வாகம் அளித்தல், உழவன் செயலி பயன்படுத்துதல் பற்றி விரிவாக விளக்கி கூறி நெல் பயிர் பாதுகாப்பு கையேடு, சாகுபடி தொழில்நுட்ப கையேடு வழங்கினார். வேளாண்மை உதவி அலுவலர் விஸ்வநாதன் பசுந்தாள் உர பயிர் தக்கைபூண்டு தேவைப்படும் விவசாயிகள் பதிவு செய்து 50 சத மானிய விலையில் அன்பில் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் பெற்றுக்கொள்ள கேட்டு கொண்டார். மேலும் மானிய திட்டங்கள், மின்கலத்தின் இயங்கும் தெளிப்பான், தார்பாய், மானிய விலையில் பெற்று கொள்ள விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சபரிச் செல்வன், அட்மா திட்ட செயல்பாடுகள், விவசாயிகள் கௌரவ நிதி திட்டம் பற்றி விளக்கி கூறினார். கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் அட்மா திட்டம் பற்றி விளக்கி கூறினார். மேலும் விவசாயிகள் பாரத பிரதமர் விவசாயிகள் கௌரவ நிதி திட்டத்தில் சுயவிவர புகைப்படத்தை ஏலுக்ஷுஶீ செய்து பயனடைய கேட்டுக்கொண்டார். இக்கூட்டத்தில் கீழ் அன்பில் கிராமத்தை சார்ந்த பல முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# உரிய பதிவு சான்றுகள் இன்றி விதைகளை விற்றால் கடும் நடவடிக்கை

சிவகங்கை, ஜூலை 3

தமிழ்நாடு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையில் பதிவு செய்யப்படாத உண்மைநிலை விதைகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சிவகங்கை விதை ஆய்வு துணை இயக்குநர் ம.இப்ராம்சா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, விவசாயிகள் விதை விற்பனை உரிமம் உள்ள விற்பனை நிலையங்களில் மட்டுமே விதைகள் வாங்க வேண்டும். தாங்கள் வாங்கும் விதைகளுக்கு கட்டாயம் இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். விற்பனை பட்டியலில் பயிர், ரகம், குவியல் எண் மற்றும் காலாவதி நாள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று பார்த்து வாங்க வேண்டும். மேலும் விற்பனை பட்டியல் இல்லாமலும், விதை விவர அட்டையில்லாமலும் மூட்டைகளில் வைத்து விற்பனை செய்யப்படும் விதைகளை தனி நபரிடமோ, வியாபாரிகளிடமோ வாங்கக் கூடாது. விவசாயிகள் விதைகளை சிவகங்கை அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து முளைப்புத்திறன் பரிசோதனை செய்த பிறகு விதைக்கலாம்.



மேலும், சிவகங்கை மாவட்ட விதை விற்பனையாளர்கள் விதைக்குவியல்களை இடைவெளி விட்டு ரகம் வாரியாக பிரித்து வைக்க வேண்டும். விதை இருப்பு, விநியோக பதிவேடுகள் முறையாக பராமரிக்க வேண்டும். விதைகள் சட்டம் 1966-இல் குறிப்பிடப்பட்ட 14 காரணிகளும் விவர அட்டையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே விற்பனை செய்ய வேண்டும். முழுமையான விவரங்களுடைய அடையாள அட்டையில் (பயிர், இரகம், குவியல் எண், நிலை, பரிசோதனை செய்யப்பட்ட நாள் (தேதி/மாதம்/ஆண்டு), காலாவதி நாள் (தேதி/மாதம்/ஆண்டு), முளைப்புத்திறன் சதவீதம் (குறைந்தபட்சம்), புறத்தூய்மை (குறைந்தபட்சம்), இனத்தூய்மை (குறைந்தபட்சம்), நிகர எடை, விதை நேர்த்தி செய்த மருந்து, உற்பத்தியாளரின் பெயர் மற்றும் முகவரி, அதிகபட்ச சில்லறை விலை, பருவம் மற்றும் பகுதி பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.






மேலும், வீரிய ரக உண்மைநிலை விதைகள் அனைத்தும் உரிய பதிவு சான்றுகள் மற்றும் பகுப்பாய்வு முடிவு அறிக்கையுடன் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. எக்காரணம் கொண்டும் காலாவதியான விதைகளை விற்கக்கூடாது. விதை உரிமம் இல்லாமல் அல்லது காலாவதியான உரிமத்துடன் விதைகள் விற்பனை மற்றும் தரமற்ற விதைகள் விற்பனை ஆகியவற்றில் ஈடுபடும் விதை விற்பனையாளர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென எச்சரிக்கப்பட்டது. ஆய்வின் போது சிவகங்கை விதை ஆய்வாளர் அ.சகாய ஜெயக்கொடி உடனிருந்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் சமச்சீர் உரமிடல் குறித்த விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜூலை 3

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்ட நிதியின் 2024-25ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட காவனூர் கிராம பஞ்சாயத்தில் 2.7.24 அன்று ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் சமச்சீர் உரமிடல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியானது காவனூர் ஊராட்சி மன்றத் தலைவர் தாஸ், தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ப.சுப்புராஜ், கலந்து கொண்டு முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் மற்றும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் பற்றியும் விளக்கினார். மதுரை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) த.மேரி ஜரின் ஆக்னிட்டா, கலந்து கொண்டு உழவன் செயலி பதிவிறக்கம், உழவன் செயலி பயன்பாடு குறித்தும், மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் குறித்தும் விளக்கினார்.

மதுரை மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், ப.பாலமுருகன் பசுந்தாளுரப் பயிர்கள் மற்றும் பசுந்தழை உரங்கள் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். மதுரை மேற்கு, தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) கலந்து கொண்டு தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினார். மதுரை, உரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்திலிருந்து வேளாண்மை அலுவலர் ராஜராஜேஸ்வரி, கலந்து கொண்டு சமச்சீர் உரமிடல் குறித்து விளக்கினார். மதுரை, மண்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சூரியபிரபா, கலந்து கொண்டு தமிழ் மண்வளம் மற்றும் மண்ஆய்வு செய்து உரமிடல் குறித்தும் விளக்கினார் மற்றும் தமிழ்மண்வள இணையதளம் உபயோகம் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. துணை வேளாண்மை அலுவலர் பெ.வரதராஜன், நெல் சாகுபடி முறைகள் மற்றும் திரவ உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்களின் பயன்கள் மற்றும் உபயோகம் குறித்து விளக்கி பேசினார்.

மண்வளம் குறித்து விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. நெல் இரகங்கள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், பசுந்தாள் உரங்கள், பசுந்தழை உரங்கள் மற்றும் மண்வகைகள், ஊட்டச்சத்து குறைபாடு குறித்த பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டன. இப்பயிற்சிக் கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் கதிரவன், பிரபு, அன்புவேல், ஆனந்தக்குமார் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் அபிராமி, அட்மா திட்ட அலுவலர்கள் ராஜசேகர், பால முருகன் மற்றும் இ.சுஜிதா ஆகியோர் செய்திருந்தனர்.

# எடப்பாடி வட்டாரத்தில்
# ரசாயன உர பயன்பாடு விழிப்புணர்வு பயிற்சி

சேலம், ஜூலை 3

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரம், வேளாண்மை துறை அட்மா திட்டத்தில் ரசாயன உர பயன்பாட்டை குறைப்பது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி செட்டிமாங்குறிச்சி வேளாண்மை துணை இயக்குனர் மத்திய திட்டம் கண்ணன், தலைமையில் நடைபெற்றது, வேளாண்மையில் இரசாயன உரங்களை குறைத்து உயிர் உரங்களையும் மற்றும் ஊட்டம் ஏற்றிய தொழு உரம் பயன்படுத்தி பயிர் சாகுபடி செய்து சுற்றுச் சூழலை பாதுகாக்க விழிப்புணர்வு ஏற்படுத்தினார். வேளாண்மை உதவி இயக்குனர் செ.மணிவாசகம் விவசாயிகளை வரவேற்று சமச்சீர் உரம் இடுதல் பற்றி எடுத்துக் கூறினார் மற்றும் மண் வளம் இணையதளம் பற்றி கூறினார். மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய தலைமை பேராசிரியர் வெங்கடா ஜலம் ஒருங்கிணைந்த உர மேலாண்மை மூலம் ரசாயன உரங்களின் பயன்பாட்டினை குறைத்து மண் மாதிரி எடுப்பதும் நீர் மாதிரி எடுத்துல், பசுந்தாள் உரம் பயன்படுத்தியும் இயற்கை வேளாண்மை செய்யலாம் என்று தெளிவாக விளக்கினார். வேளாண்மை அலுவலர் மோ.பூங்கொடி, வேளாண்மை திட்டங்கள் மானிய திட்டங்கள் குறித்து விளக்கி கூறினர். பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் பயிற்சிகள் கலந்து கொண்ட 40 விவசாயிகளுக்கு மதிய உணவு மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது அட்மா திட்ட அலுவலர்கள் விவசாயிகளுக்கு நன்றி உரை கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை செட்டிமாங்குறிச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.